## சென்னை அண்ணா அறிவாலயத்தில் 15–ஆம் தேதி காலை

# தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் மனுக்களைப் பெறுகின்றனர்!

### கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப்.13-

தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் நாளை மறுநாள் 15-ஆம் தேதி காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவர் சங்கங்கள், கல்வியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறுகின்றனர் என்றும், மாவட்டத்தில் உள்ள கழகத்தினர், அவர்கள் அனைவரையும் அறிவாலயத்திற்கு அழைத்து வந்து, தேர்தல் அறிக்கை தயாரிக்கும் இக்குழுவினரிடம் அவர்களின் கோரிக்கை மனுக்களை தருவதற்கு உதவிட வேண்டும் என்று, மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

பத்தாண்டுகாலம் இருண்டு கிடந்த தமிழ் நாட்டை மீட்டெடுத்து, எல்லோர்க்கும் எல்லாம் என ஒளிமயமான பாதையில் பயணிக்கச் செய்திருக்கும் திராவிட மாடல் அரசு, கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைவர் அளித்த 505 வாக்குறுதிகளில் 404-க்கும் அதிகமானவற்றை நிறைவேற்றி, சொன்னதைச் செய்த அரசாக, சொல்லாததையும் செய்த அரசாக மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளது.

இந்த அற்புத சாதனைகளின் தொடர்ச்சியாக, அடுத்த 5 ஆண்டுகளுக்கான வளர்ச்சியைத் திட்டமிட 'திராவிட மாடல் 2.0' தயாராகி வருகிறது. இந்த புதிய பயணத்திற்கான தேர்தல் அறிக்கை என்பது வெறும் காகிதமல்ல, அது மக்களின் குரலாக இருக்க வேண்டும் என்று கழக தலைவர் அவர்களின் விருப்பத்தின்படி, ஒவ்வொரு தமிழ்நாட்டு குடிமகனின் தேவையையும் பிரதிபலிக்கும் வகையில், மக்கள் பங்கேற்புடன் கூடி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் அறிக்கையை உருவாக்க கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு தயாராகி வருகிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டலின்படி, 2026 சட்டப் பேரவை தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஜனவரி 15-ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் திருமிகு.கனிமொழி கருணாநிதி, எம்.பி. அவர்கள் தலைமையில் டி.கே.எஸ். இளங்கோவன், முனைவர் கோவி.செழியன், முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, எம்.எம். அப்துல்லா, பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மருத்துவர் எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, திருமதி.ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய குழு பயணம் செய்து பொதுக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் நேரில் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளை பெற்று வருகின்றனர்.

அதன்படி, வருகிற 15-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் இத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் காஞ்சிபுரம் வடக்கு கழக மாவட்டத்தில் அடங்கியுள்ள அனைத்து தரப்பு மக்களிடம் இருந்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரை மனுக்களை பெறுகின்றனர்.

எனவே, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் - வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் நேரில் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக அவர்களை வாகனங்கள் மூலம் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலத்திற்கு உட்பட்ட 48வது வார்டு கம்பர் தெருவில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் புதிய தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல அலுவலகம் மற்றும் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமான பணிக்கு குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அடிக்கல் நாட்டினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர் எஸ்.இந்திரன், இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## புழல், மகாலட்சுமி நகரில் சி.எம்.டி.ஏ. சார்பில் மாநகராட்சி

# நடுநிலைப்பள்ளிக் கட்டடம் - பிப்.25-க்குள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப்.13-

புழல், மகாலட்சுமி நகரில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டடம் இம்மாதம் 25-ஆம் தேதிக்குள் கல்வி கற்கும் மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்கு அரப்பணிக்கப்படும் என்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (12.2.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புழல், மகாலட்சுமி நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டடம், எண்ணூர் சமுதாய நலக்கூடம் மற்றும் வணிக வளாக கடைகள், தண்டையார் பேட்டை நவீன பேருந்து நிலையம் மற்றும் மூலகொத்தளம் சமுதாய நலக் கூடத்தின் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்களையும் அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

1967-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நடுநிலைப் பள்ளி, இந்தத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் சுதர்சனம் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் நவீனமயமாக்கப்பட்ட புதிய பள்ளிக் கட்டிடத்தை வடிவமைத்திருக்கிறோம்.

இந்தக் கட்டிடம் ஏற்கனவே 623-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்காலிக கட்டிடங்களில் பயின்று வரும் சூழலில், அவர்கள் இந்த புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு படிக்க வரும் போது, அவர்களுடைய மனதில் மிகப்பெரிய உற்சாகமும் எழுச்சியும் உருவாகும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.

தற்போது ரூ.14 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் இந்த பள்ளிக் கட்டிடம், வரும் 25ஆம் தேதிக்குள் மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும். தனியார் பள்ளிகளுக்கு நிகரான தரத்தில் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடப் பணிக்கு பெரிதும் ஒத்துழைப்பு வழங்கிய சட்டப்பேரவை உறுப்பினர் சுதர்சனம், எங்கள் துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்கள், உறுப்பினர் செயலர் பிரகாஷ் அவர்கள், பணிகளை மேற்பார்வை செய்த துறையின் கண்காணிப்பு பொறியாளர் .ராஜன்பாபு ஆகியோருக்கு துறையின் அமைச்சராகிய என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மட்டற்ற மகிழ்ச்சியையும் அடைகிறேன்.

இந்தக் கட்டிடத்தில் ஒரு ஹைடெக் ஆய்வகமும் (Hi-Tech Lab), ஒரு நூலகமும் இடம் பெற்றுள்ளன. மேலும், கூடுதல் வசதிகளை இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கோரியுள்ளார். அவற்றையும் உடனடியாக நிறைவேற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஜே.ஜே.எபினேசர், ஐட்ரிம்ஸ் ஆர்.மூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர்/முதன்மைச் செயலாளர் செயலர் கோ.பிரகாஷ், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு. இந்துமதி, திருமதி.பர்ஹத் பேகம், டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் ராஜன்பாபு, மண்டலக் குழுத்தலைவர்கள் நந்த கோபால், தனியரசு, நேதாஜி உ.கணேசன், பி.ஸ்ரீ ராமுலு, எம்டிசி பொது மேலாளர்கள் (இயக்கம்) நெடுஞ்செழியன், (வடக்கு) ராஜசேகர், மாமன்ற உறுப்பினர் திருமதி.கோமதி சந்தோஷ், உள்ளாட்சி பிரதிநிதி புழல் நாராயணன், பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.ஜான்சிராணி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## “உலகம் உங்கள் கையில்” எனும் மாபெரும் திட்டத்தின் கீழ்,

# 4,044 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை,பிப்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (12.2.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நீலாங்கரை, ஆர்.கே.கன்வென்ஷன் ஹாலில் நடைபெற்ற “உலகம் உங்கள் கையில்” எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட 27 கல்லூரிகளைச் சார்ந்த 4,044 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட அன்னை வேளாங்கண்ணி பெண்கள் கல்லூரி, அன்னை வேளாங்கண்ணி மருந்தகக் கல்லூரி, செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கான செயின்ட் லூயிஸ் கல்லூரி, நர்சிங் பள்ளி, துர்காபாய் தேஷ்முக் பொது மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகிய கல்லூரிகளை சார்ந்த 387 மாணவர்கள், பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட ஜெருசலம் பொறியியல் கல்லூரி, ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சார்ந்த 700 மாணவர்கள்,

சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட கே.சி.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி, டி.ஜே. தொழில்நுட்ப நிறுவனம், சென்னை அறிவியல் மற்றும் கலை கல்லூரி, செங்கல்பட்டு, ஜேப்பியர் பொறியியல் கல்லூரி, தங்கவேலு பொறியியல் கல்லூரி, மிஸ்ரிமால் நவாஜி முனோத் ஜெயின் பொறியியல் கல்லூரி, சென்னை 2007 சி.எல். பெய்ட் மேத்தா மருந்தகக் கல்லூரி, 027 சி.எல். பெய்ட் மேத்தா மருந்தகக் கல்லூரி, மிஸ்ரிமால் நவாஜி முனோத் ஜெயின் கட்டடக் கலை பள்ளி, முகமது சதக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ராஜீவ் காந்தி சாலைஅறிவியல் மற்றும் மனிதநேயப் பள்ளி, நர்சிங் பள்ளி, மின் மற்றும் மின்னணுவியல் கல்லூரி, இயந்திரவியல் பள்ளி, முகமது சதக் ஏ.ஜே. மருந்தியல் பள்ளி, மேலாண்மை படிப்புகள் பள்ளி, மருந்தகக் கல்லூரி, உயிரி மற்றும் வேதியியல் பள்ளி, செயின்ட் ஜோசப் தொழில்நுட்ப நிறுவனம், செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி, தனராஜ் பெயிட் ஜெயின் கல்லூரிகளைச் சார்ந்த 2,957 மாணவர்கள் என மொத்தம் 27 கல்லூரிகளைச் சார்ந்த 4,044 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர்கள் வி.இ.மதியழகன் (சோழிங்கநல்லூர்), எஸ்.வி.ரவிச்சந்திரன் (பெருங்குடி), மாமன்ற உறுப்பினர்கள், மண்டல அலுவலர்கள், கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் இலவச வீட்டு மனைப் பட்டா!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்!

### குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், பிப்.13-

காஞ்சிபுரம் மாவட்டம் ஆலத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் இரண்டு பூங்காக்கள், 2 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மௌலிவாக்கம் ஊராட்சிகயில் பேருந்து நிழற்குடை, கெருகம்பாக்கம் ஊராட்சியில் பேருந்து நிழற்குடை, பெரியபணிச்சேரி ஊராட்சியில் மகளிர் சுய உதவி குழு கட்டடம், கோவூர் ஊராட்சியில் நான்கு பேருந்து நிழற்குடைகள், தண்டலம் ஊராட்சியில் நியாய விலை கட்டிடம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்து வைக்க உள்ளார். மேலும் பரணிபுத்தூர் ஊராட்சி உள்ள கிருஷ்ண வேணி பேலஸ் திருமண மண்டபத்தில் சுமார் ஆயிரம் நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்க உள்ளார்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தே மாதரம் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள இருப்பதால் கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் இளைஞரணி, மாணவரணி, மகளிரணியினர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 358 வது நாள்!

### வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,பிப்.13-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 358 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (12.2.2026), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 94அ, பாலியம்ன் கோயில் தெரு, வில்லிவாக்கம், 2) வட்டம் 94, சிட்கோ நகர், வட்ட செயலாளர், சிட்கோ சேகர் ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம்.சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர். தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, K.S.பாபு எ. வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ. துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் நேற்று (12.02.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையத்தின் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி உ.கணேசன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஃபர்ஹத் பேகம், எம்டிசி பொது மேலாளர்கள் (இயக்கம்) நெடுஞ்செழியன். (வடக்கு) ராஜசேகர் கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.